

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல்**

**மறைத்திரு திருத்தொண்டர் சந்தனசாமி பீட்டர்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து : சமாதானத்திற்கான பணி: அன்பும் கலந்துரையாடலும் முரண்பாடுகளை எப்பொழுதும் மேற்கொள்ள வேண்டுமென்று**

**நவம்பர் மாத கரு : கிறிஸ்துவில் புனிதத்துவத்திற்கு அழைப்பு**

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| நவ 11 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்காலம் 32ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | பொதுக்காலம் 32ஆம் ஞாயிறு |
| | மாலை 5.30 | புகழாராதனை/ திருப்பலி (த) | புனித பிரான்சிஸ் அசிசி சிற்றாலயம், தாசேக் |
| நவ 12 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித ஜோசபாத் |
| நவ 16 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | புனித மார்கரேட் & கெத்ரூட் |
| நவ 17 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | அங்கேரி புனித எலிசபெத் |
| நவ 18 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்காலம் 33ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ) | பொதுக்காலம் 33ஆம் ஞாயிறு |
| | காலை 11.00 | திருப்பலி (ம) | பொதுக்காலம் 33ஆம் ஞாயிறு |
| | மாலை 6.00 | நவநாள்/ திருப்பலி (த) | கிறிஸ்து அரசர் சிற்றாலயம், புந்தோங் தீகா - கொடியேற்றம் |

**பங்கு நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| நவ 11 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| நவ 12 திங் | மாலை 7.45-9.15 | பெர். மை 2-2 | RCIA வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் & ஏற்பாட்டாளர்கள் கூட்டம் |
| | மாலை 8.00 | பெர். மை 1-3 | புலூமா மகளிர் குழு கூட்டம் |
| நவ 13 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை குழு |
| நவ 14 புதன் | மாலை 8.00 | பெர். மை 1-1 | அருங்கொடை (த) |
| | மாலை 8.00 | பெர். மை 2-3&2-5 | சீடத்துவ நிகழ்வு |
| நவ 15 வியா | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் வாசகர் பயிற்சி |
| | மாலை 7.45-9.15 | பெர். மை 2-1&2-2 | RCIA |
| | மாலை 8.00 | பெர். மை 1-3 | ஆன்மீக குழு கூட்டம் |
| நவ 16 வெள் | மாலை 7.30 | ஆலயம் | குழந்தைகள் திருமுழுக்கு விளக்கவுரை (பெற்றோர்கள்& ஞானபெற்றோர்கள்) |
| நவ 17 சனி | மாலை 4.30 | ஆலயம் | குழந்தைகள் திருமுழுக்கு |
| | மாலை 5.30 | ஆலயம் | செபமாலை/ சகாயமாதா நவநாள் |
| நவ 18 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |

**2018 நவம்பர் & டிசம்பர் மாத திருமணங்கள்**

நவ 24 காலை 11.00 திருமணம் (த) நெல்சன் ராஜ் த/பெ ராஜமணி & நென்சி லெட்சுமி த/பெ ராமன்

நவ 24 மாலை 4.30 திருமணம் (த) மரிய தாஸ் த/பெ செல்வநாதன் & மெர்சி ரீத்தா த/பெ அந்தோணிசாமி

நவ 14 காலை 9.30 திருமணம் (த- திருச்சி, இந்தியா) ஜெராட் ராஜ் த/பெ மைக்கல் & பிரிசில்லா ஜெனித்தா மேரி

டிச 1 காலை 11.00 சடங்கு (த) அலெக்ஸ் வேளாங்கண்ணி த/பெ ஆரோக்கியசாமி & கோகிலவானி த/பெ ஞானசேகரன்

டிச 1 மதியம் 2.00 திருமணம் (த) விக்டர் ஜோர்ஜ் த/பெ ஜோசப் & டோனரீத்தா த/பெ லாசரஸ்

டிச 1 மாலை 4.30 திருமணம் (த) கிரகோரி எட்வர்ட் த/பெ சந்தனதாஸ் & ஜீயன்னா ஏன் பிரேமாவதி த/பெ ராஜேந்திரன்

டிச 8 மாலை 4.30 திருமணம் (ஆ) எட்மன் ராஜ் த/பெ வின்சென்ட் போல் & கோமதி த/பெ தர்மலிங்கம்

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் அல்லது திருத்தொண்டரிடம் தெரிவியுங்கள்

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. பங்கு மண்டப மறுசீரமைப்பு:** லூர்து மண்டபத்தை மேம்படுத்தி முழுமையாக மறுசீரமைப்பு செய்துவிட்டோம். இது திருமண வரவேற்பு, நிச்சயதார்த்தம் மற்றும் மற்ற நிகழ்ச்சிகளுக்கும் பொதுவானது. 2019க்கான பதிவுகள் இப்போதிலிருந்து தொடங்குகிறது. பதிவு செய்வதற்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

**2. தமிழ் மொழிபெயர்ப்பு:** ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு துல்லியமான மொழிபெயர்ப்புப்பற்றிய கருத்து பங்கு மாநாட்டின்போது எழுப்பப்பட்டது. பதில்: ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு துல்லியமான மொழிபெயர்ப்பு இல்லை. எந்தவொரு மொழிபெயர்ப்பும் ஒரு சொல்லின் அர்த்தத்தையும், உணர்வையும் கொண்டு வர இயலாது. நாம் வழக்கமாக செய்வது என்னவெனில் "நெருக்கமான மொழிபெயர்ப்பு". இது மற்ற மொழியின் அர்த்தத்தை புரிந்துக்கொள்ள உதவும். அப்படி நமது மொழிப்பெயர்ப்பு சிலருக்கு திருப்தியாக இல்லாவிடில், நான் "அந்த சிலரை" நமது புலூஅ மொழிபெயர்ப்பு குழுவில் இணைய அழைக்கிறேன். சில சொற்கள் "அச்சுப்பிழை" காரணமாக பிழையாக இருக்கின்றன, அவை வேண்டுமென்றே செய்யப்பட்டவை அல்ல.

**3. கிறிஸ்துமஸ் இசை இரவு & பங்கு மண்டபம் ஆசீர்வதித்தல்:** கிறிஸ்துமசை முன்னிட்டு கிறிஸ்துமஸ் இசை இரவு நிகழ்ச்சியின் தலைப்பு "நெஞ்சுக்குள் பிறக்கவா" 22 டிச 2018 (சனி) மாலை 6.00க்கு பங்கு மண்டபத்தில் நடைபெறும் அதிஷ்ட கூப்பன்கள் ரிம 10/- (ஒரு புத்தகம்) 11 நவ 2018 ஞாயிறு முதல் திருப்பலிகளுக்கு பிறகு விற்கப்படும். இந்த நிகழ்வுக்கு நிதி அளிக்க பங்கு மக்கள் தயவு செய்து கூப்பன்களை வாங்கி ஆதரவு தாருங்கள். நமது ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் வருகை புரிந்து பங்கு மண்டபத்தை ஆசீர்வதிப்பார். வாருங்கள் ஒரு பங்கு சமூகமாக கிறிஸ்துமசை கொண்டாடுவோம்.

**4. மூத்தோர் பணிக்குழு:** அடுத்த ஒன்றுகூடுதல் 20 நவ 2018 (செவ்) காலை 9.30க்கு பெர். மையத்தில் திருப்பலியுடன் தொடங்கும். 60 வயதுக்கு மேற்பட்ட பங்கு மக்கள் கலந்துக்கொள்ள வரவேற்கப்படுகிறீர்கள்.

**5. ஞாயிற்றுகிழமைகளில் இறந்தவருக்கான திருப்பலிகள்:** திருவழிப்பாட்டின்படி இறந்தவருக்கான திருப்பலிகள் பொதுக்கால ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் அனுமதிக்கப்படும். திருவருகைக்காலம், தவக்காலம், புனித வாரம், கடன் திருநாட்கள் மற்றும் பெருவிழாக்காலங்களில் உள்ள ஞாயிற்றுக்கிழமைகளில் இறந்தவருக்கான திருப்பலிகள் அனுமதிக்கப்படாது.

**6. திருமண சடங்கிற்கான நற்கருணை:** இது ஆயர் மாநாட்டின் பொதுவான வழிமுறையாகும். நற்கருணை கத்தோலிக்க திருமண சடங்கிற்கு (கலப்பு திருமணம்/ வேறுபாடான சமய வழிபாடு) கொடுக்கப்படமாட்டாது. எனினும் நீங்கள் இந்த விதி விலக்கிற்காக ஆயரிடம் விண்ணப்பிக்க தேர்வு செய்யலாம். பினாங்கின் ஆயர் இதனை ஏற்றுக்கொள்வதற்கும் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கும் உரிமை இருக்கிறது.

**7. சந்தா உறைகள்:** சந்தா உறைகளை எடுத்து பங்கிற்கு பங்களிப்பு செய்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை 50% மக்கள் மட்டுமே செலுத்தியுள்ளபோதிலும், செலுத்தாமல் இருப்போர் தயவு செய்து உங்களின் வெறுமையான உறைகளை பங்கில் மீண்டும் ஒப்படைக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் விநியோகிக்கப்பட்ட பட்டியலின்படி கணக்கறிக்கை செய்ய வேண்டியுள்ளது.

**8. அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (தமிழ்):** நாள்: 17 நவம்பர் 2018 (சனி), நேரம்: மாலை 4.30 மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**9. அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய நிலவரம்:** ஈப்போ நகராண்மைக் கழகத்திடமிருந்து சிற்றாலயம் கட்டுவதற்கான அனுமதியை நாம் பெற்றுவிட்டோம். கட்டிட வரைபட திட்டத்தை நகராண்மைக் கழக அங்கீகாரத்திற்கு நாம் சமர்பிப்போம். நமது இடம், சிற்றாலயம் கட்டுவதற்கு அரசாங்க உரிமை குடியிருப்பு அரசிதழ் (கெசட்டெட்) பதிவுப் பெற்றுள்ளது. 14/9/2018ஆம் நாள் நாம் இந்த பத்திரத்தை பெற்றுக் கொண்டோம்.

**10. வடக்கு திசை அதிச-வின் காலை சிற்றுண்டி:** வடக்கு திசை அதிச 11 நவ & 18 நவ (ஞாயிறு) காலை 7.00 & 9.00 மணி திருப்பலிகளுக்கு பிறகு விற்பனை செய்யவுள்ளனர். கிடைக்கக்கூடிய பணம் அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதிக்கு சேரும். மதிய உணவு பொட்டலங்களாகவும் விற்கப்படும். தயவு செய்து உங்களது ஆதரவை தாருங்கள்.

**11. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டட நிதி அக்டோபர் 2018 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **412,155.31** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **480,277.10** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**04/11/18 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 988.25 **காலை 9.00** - RM 3,075.60 **மொத்தம்**- RM 4,063.85

**2018** - RM 555.00 **ஏழைகளுக்கு** - RM 787.40 **அனைத்து புனிதர்களின் நினைவு** - RM 1,370.75

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்